**செய்தி வெளியீடு எண்: 735** **நாள்: 07.12.2012**

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று (7.12.2012) தலைமைச் செயலகத்தில், 31.12.2012 முதல் 6.1.2013 வரை சென்னையில் நடைபெறவுள்ள சென்னை ஓபன் டென்னிஸ் விளையாட்டுப் போட்டிகள் நடத்திட தமிழக அரசின் பங்களிப்பாக இரண்டு கோடி ரூபாய்க்கான காசோலையினை தமிழ்நாடு டென்னிஸ் சங்கத் தலைவர் திரு. எம்.ஏ.அழகப்பன் அவர்களிடம் வழங்கினார்கள்.

அறிவார்ந்த ஆரோக்கியமான இளைய சமுதாயம் உருவாகிட கல்வி, விளையாட்டு ஆகிய இரண்டிலும் இளைஞர்கள் அதிக கவனம் செலுத்திட வேண்டும் என்ற உயரிய நோக்கில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தமிழகத்தில் விளையாட்டுத் துறைக்கு முன் எப்போதும் இல்லாத அளவில் முக்கியத்துவம் அளித்து வருகிறார்கள்.

இதன் அடிப்படையில், டென்னிஸ் விளையாட்டில் தெற்காசியாவில் உலகப் புகழ் பெற்ற விளையாட்டு வீரர்கள் கலந்து கொள்ளும் மிக முக்கிய போட்டியான சென்னை ஓபன் டென்னிஸ் விளையாட்டுப் போட்டிகள் தமிழ்நாடு டென்னிஸ் சங்கத்தினால் ஆண்டுதோறும் சென்னையில் சர்வதேச தரத்திலுள்ள டென்னிஸ் விளையாட்டு அரங்கில் நடத்தப்பட்டு வருகின்றன. முதன் முறையாக 2005–ஆம் ஆண்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் சென்னை ஓபன் டென்னிஸ் போட்டிகள் நடத்திட தமிழக அரசின் சார்பில் 1 கோடி ரூபாய் நிதியுதவி வழங்கினார்கள். அதே போன்று கடந்த ஆண்டும் சென்னை ஓபன் டென்னிஸ் போட்டிகளை சிறப்பாக நடத்துவதற்கு தமிழக அரசின் சார்பில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 1 கோடி ரூபாய் வழங்கினார்கள்.

தமிழ்நாடு டென்னிஸ் சங்கம் 31.12.2012 முதல் 6.1.2013 வரை நடத்தவுள்ள சென்னை ஓபன் டென்னிஸ் விளையாட்டுப் போட்டிகளை சிறந்த முறையில் நடத்துவதற்கு 2 கோடி ரூபாய் நிதியுதவி வழங்கிடுமாறு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடம் கோரிக்கை வைத்தது.

அந்தக் கோரிக்கையை கனிவுடன் பரிசீலித்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் மக்களின் பெரும் வரவேற்பினை பெற்று உலகின் தலைசிறந்த டென்னிஸ் வீரர்களும், இந்தியாவின் தலைசிறந்த டென்னிஸ் வீரர்களும் பங்கு கொள்ளும் சென்னை ஓபன் டென்னிஸ் விளையாட்டுப் போட்டிகளை

சிறந்த முறையில் நடத்துவதற்கு தமிழக அரசின் சார்பில் 2 கோடி ரூபாய் வழங்குவதற்கு உத்திரவிட்டிருந்தார்கள். இந்தக் தொகைக்கான காசோலையினை தமிழ்நாடு டென்னிஸ் சங்கத் தலைவர் திரு. எம்.ஏ.அழகப்பன் அவர்களிடம் வழங்கி, இந்த டென்னிஸ் போட்டிகளை சிறந்த முறையில் நடத்தி தமிழகத்திற்கு பெருமை சேர்த்திட வேண்டும் என்ற தனது விருப்பத்தினைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

இந்த நிகழ்வில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறைச் செயலாளர், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் செயலர், தமிழ்நாடு டென்னிஸ் சங்கத்தின் கௌரவ செயலர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

*******

வெளியீடு : இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9
நாள் : 7.12.2012